**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre
# தவணைப் பரீட்சை மார்ச் - 2019
# Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | ஐரோப்பிய வரலாறு | நேரம் :- 3.10 மணித்தியாலம் |
|---|---|---|

**கவனிக்க.**
- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுக்க.
- வழங்கப்பட்டுள்ள நேரம் பகுதி I, பகுதி II இற்கும் உரியதாகும்.

- **01 – 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்கள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1) 1. கொறிந் 2. ஸ்பாட்டா 3. தீப்ஸ்
4. மெகரா 5. மரதன் ( )

2) 1. மிரான் 2. பீடியாஸ் 3. பாலிக் லீடஸ்
4. பெயோனியஸ் 5. ஈகிளிஸ் ( )

3) 1. சீசர் 2. டயோகிளிஷன் 3. அகஸ்டஸ்
4. கிளியோபெற்றாக் 5. நீரோ ( )

4) 1. வடகடல் 2. மஞ்சள் கடல் 3. அற்றியாற்றிக்கடல்
4. ஈஜியன் கடல் 5. அயோனியன் கடல் ( )

5) 1. வைஹிங் 2. சக்சன்ஸ் 3. பிராங்கியர்
4. பிளப்பியர்கள் 5. ஹங் ( )

6) 1. லிவர்பூல் 2. பொலஞ்ஞா 3. பாரிஸ்
4. கேம்பிரிட்ஜ் 5. பாதுவா ( )

7) 1. 5ம் நிக்கலஸ் 2. 5ம் சாள்ஸ் 3. 6ம் அலெக்சாண்டர்
4. 2ம் யூலியஸ் 5. 10ம் லியோ ( )

8) 1. லங்காஸ்டர் 2. தியூடர் 3. பூர்பன்
4. ஸ்ருவாட் 5. ஹனோவர் ( )

9) 1. குரொம்வெல் 2. மசாரின் 3. டர்க்கோ
4. மெரீபா 5. நெக்கர் ( )

10) 1. ஜோன்லொக் 2. தோமஸ் கொப்ஸ் 3. ஜின் ஜெக்ரூசோ
4. அடம்ஸ்மித் 5. மாக்கியவல்லி ( )

- **11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று பொருந்தவில்லை. அச்சோடியைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11) 1. சியூஸ் – யூப்பிட்டர்
2. ஏரஸ் - மார்ஸ்
3. அப்போடைற் - வீனஸ்
4. அப்பல்லோ - ஆர்டிமிஸ்
5. பொசிடன் - நெப்ரியூன் ( )

agaram.lk

12) 1. வாஸ்கொடகாமா - கள்ளிக்கோட்டை
2. அமெரிக்கோ வெஸ்புசி - அமெரிக்கா
3. கொம்பஸ் - கரிபியன் தீவுகள
4. மகலன் - பிலிப்பைன்ஸ்
5. பத்தலோமியஸ் டயஸ் - மடகஸ்கார் ( )

13) 1. மத்திய தரைக்கடலும், செங்கடலும் - சுயெஸ் கால்வாய்
2. வடகடலும், பால்டிக் கடலும் - கீல்க் கால்வாய்
3. மொரொக்கோவும், ஸ்பானியாவும் - டாடனஸ் நீரிணை
4. அத்திலாந்திக் சமுத்திரமும், பசுபிக் சமுத்திரமும் - பனாமாக் கால்வாய்
5. இங்கிலாந்தும், பிரான்சும் - ஆங்கிலக் கால்வாய் ( )

14) 1. புவியியல் - தொலமி
2. தத்துவம் - தேலிஸ்
3. தர்க்கவியல் - சோக்கிரட்டீஸ்
4. கணிதவியல் - பைதகரஸ்
5. அளவையியல் - அரிஸ்ரோட்டில் ( )

15) 1. மானிய முறை - கூட்டாண்மை
2. மறுமலர்ச்சி - மானிடவாதம்
3. சமூகவுடமை - கூட்டு முதலீட்டு கம்பனிகள்
4. பிரதிச் சீர்திருத்தம் - எதிர்ச் சமயவாத ஒழுக்கம்
5. தேசிய அரசு - புதிய முடியாட்சி ( )

- **16 – 20 வரையான வினாவுக்களுக்கு X ,Y என நிரல்களில் பொருந்தக்கூடிய வகையில் தொடர்படுத்தும் போது வரும் சரியான சேர்மானத்தின் விடையை இனங்கண்டு அவற்றுக்குரிய இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16)

| X | Y |
|---|---|
| 1. மானிட வாதம் | A. ஓர் இனம், பண்பாடு, மொழி என்பனவற்றை உடமையாகக் கொண்ட மக்களின் சுயாதீன நாட்டை நிர்மாணிப்பதில் காட்டும் விருப்பம் |
| 2. தெய்வீக வழியுரிமை வாதம் | B. மனித சுய கௌரவம், திறமை என்பவற்றை உறுதிப் படுத்த அவனிடம் காணப்படும் ஆற்றல். |
| 3. தேசிய வாத் | C. அரசின் கட்டுப்பாடின்றி பொருளாதார விருத்திக்கு இடமளித்தல் தொடர்பான கொள்கை |
| 4. தலையிடாக் கொள்கை | D. பெரும்பாலான மக்களின் உயர்ந்தபட்சம் மகிழ்ச்சியை கொண்ட நம்பிக்கை. |
| 5. பயன்பாட்டு வாதம் | E. மன்னனுக்கு நாட்டை நிருவகிப்பதற்கான உரிமை கடவுளிடமிருந்து கிடைக்கிறது என்ற நம்பிக்கை. |

1. ABECD 2. AEDCB 3. BACDE 4. BEACD 5. DEABC ( )

17)

| X | Y |
|---|---|
| 1. பிரனீஸ் | A. ஒரு தீவு |
| 2. ஜிப்ரோல்டர் | B. ஒரு கால்வாய் |
| 3. கீல் | C. ஓர் ஆறு |
| 4. மோல்டா | D. ஓர் மலை |
| 5. வொல்கா | E. ஒரு நீரிணை |

1. DEBAC 2. DBCAE 3. CBADE 4. EDCBA 5. ABCDE ( )

agaram.lk

18) X | Y

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | இங்கிலாந்து | A. | மொன்ரெயினே |
| 2. | இத்தாலி | B. | கலிலியோகலிலி |
| 3. | ஜேர்மனி | C. | ஐசாக் நியூட்டன் |
| 4. | போலந்து | D. | கெப்லர் |
| 5. | பிரான்ஸ் | E. | கொப்பனிக்கஸ் |

1. CBDEA 2. CAEBD 3. CDBEA 4. CBAED 5. CEABD ( )

19)

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | பிரதிநிதித்துவம் இன்றேல் வரியில்லை | A. | ரஷ்ய புரட்சி |
| 2. | சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் | B. | இங்கிலாந்துப் புரட்சி |
| 3. | நிலம், உணவு, சமாதானம் | C. | 1848 புரட்சி |
| 4. | சட்டமியற்றும் அதிகாரம் பாராளுமன்றிற்கே | D. | பிரான்சியப் புரட்சி |
| 5. | புரட்சிகளின் வருடம் | E. | அமெரிக்க புரட்சி |

1. EADBC 2. EBADC 3. DEABC 4. EBACD 5. ADEBC ( )

20)

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | எஸ்ரேட் ஜெனரல் | A. | ரஷ்யா |
| 2. | கோர்டீஸ் | B. | ஐக்கிய அமெரிக்கா |
| 3. | டூமா | C. | பிரான்ஸ் |
| 4. | காங்கிரஸ் | D. | இங்கிலாந்து |
| 5. | பாராளுமன்றம் | E. | ஸ்பானியா |

1. DCEAB 2. CEABD 3. DEACB 4. BEACD 5. EDACB ( )

- **21 – 25 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தவில்லை அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21) முப்பதாண்டுப் போர்.
1. முப்பதாண்டுப் போரின் முடிவில் வியன்னா உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.
2. மக்ஸிமிலன் கத்தோலிக்க தீவிர பற்றாளன் ஆவான்.
3. ரிச்செல்யு புரட்டஸ்தாந்துகளுக்கு உதவிபுரிய விரும்பினான்.
4. பொகுமிய சம்பவத்தோடு முப்பதாண்டுப் போர் ஆரம்பித்தது.
5. பேரரசுப் படைகளுக்கு ரில்லி தலைமை தாங்கினான். ( )

22) அமெரிக்க சுதந்திரப் போர்
1. டவுன்சன் சட்டம் அமெரிக்க சுதந்திரபோருக்கு அடிப்படையாக அமைந்தது.
2. ஜோர்ஜ் வொசிங்டன் அமெரிக்க சுதந்திரப்போருக் தலைமை தாங்கினார்.
3. ஜோர்ஜியாவில் கண்டங்களின் மகாநாடு கூட்டப்பட்டது.
4. பொஸ்டன் தேநீர் விருந்து அமெரிக்க சுதந்திரப் போரின் ஆரம்ப நிகழ்வாகும்.
5. குடியேற்றவாசிகளுக்கு பிரான்ஸ் உதவி புரிந்தது. ( )

23) இத்தாலி ஐக்கியம்
1. மசினி இத்தாலி ஐக்கியத்திற்கான எண்ணங்களை விதைத்தார்.
2. நெப்போலியன் பொனபாட் வட இத்தாலி ஒன்றியத்தை உருவாக்கினான்.
3. சாவோயின் கரிபால்டி புரட்சிகர அரசொன்றை நிறுவினான்.
4. பீட்மன், சாடினியா அரசு தலைமை வகித்தது.
5. ஆஸ்திரியா, இத்தாலி ஐக்கியத்திற்கு உதவியது. ( )

24) கைத்தொழிற்புரட்சி.
  1. கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பமாகிறது.
  2. பின்பு அது பிற ஐரோப்பிய தேசங்களுக்குப் பரவியது.
  3. கைத்தொழிற்புரட்சி உற்பத்தியை அதிகரித்தது.
  4. கைத்தொழிற்புரட்சி என்பது கிராமிய விவசாயம் பொருளாதாரம் நகரங்களை மையமாகக் கொண்ட இயந்திர சாதனங்கள் மூலமான உற்பத்தி முறைக்கு மாற்றம் அடைந்தமையைக் குறிக்கும்.
  5. கைத்தொழிற் புரட்சியினால் பலன்களைப் பெற்ற முதலாவது ஐரோப்பிய நாடு போர்த்துக்கல் ஆகும். ( )

25) அமெரிக்காவில் காணப்பட்ட பழங்குடியினர்
  1. ஹோல்பெல் 2. இிராக்கொயிஸ் 3. பியூப்லோ
  4. அபோறியன்ஸ் 5. மாயா ( )

- **26 – 30 வரையுள்ள ஒவ்வொன்றிற்கும் (A) (B) (C) (D) என்னும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளும் சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்க.**
  (A) யும் (B) மட்டும் சரியாயின் 1 எனவும்
  (B) யும் (C) மட்டும் சரியாயின் 2 எனவும்
  (C) யும் (D) மட்டும் சரியாயின் 3 எனவும்
  (A) யும் (C) மட்டும் சரியாயின் 4 எனவும்
  ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

| **அறிவுறுத்தல்களின் சுருக்கம்** | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரி |

agaram.lk

26) ஐரோப்பாவின் நாடுகாண் பயணம் தொடர்பாக பின்வரும் எக்கூற்று / சரியானது / சரியானவை.
  A) ஆரம்ப நாடுகாண் பயணங்களை போர்த்துக்கல்லும் ஸ்பானியாவும் ஈடுபட்டது.
  B) வாஸ்கொடகாமா பார்த்தலோமியஸ்டயஸ் ஆகியோர் ஆரம்ப நாடுகளின் பயணிகள் ஆவர்.
  C) இங்கிலாந்தை சேர்ந்த நாடுகாண் பயணிகள் அமெரிக்க கண்டத்தை கண்டறிந்தனர்.
  D) போர்த்துக்கேயரின் ஆசியக் குடியேற்றங்களில் ஒன்று பிலிப்பைன்ஸ் ஆகும். ( )

27) பிரித்தானிய பாராளுமன்ற முறை வளர்ச்சி.
  A) இங்கிலாந்து பாராளுமன்ற முறை வளர்ச்சி பூர்பன் வம்சத்துடன் ஆரம்பமாகியது.
  B) மக்னா கர்ட்டா 3ம் ஜோன் மன்னன் காலத்தில் கைச்சாத்திடப்பட்டது.
  C) 1ம் எட்வேட் மன்னன் பாராளுமன்றத்தின் தந்தை ஆவார்.
  D) 1ம் சாள்ஸ் மன்னன் காலத்தில் பாராளுமன்றத்திற்கும் மன்னனுக்கும் இடையே போர் ஏற்பட்டது. ( )

28) ஜேர்மனி இராச்சியம்
  A) ரைன் சமஷ்டி கூட்டரசை நெப்போலியன் அமைத்தார்.
  B) வியன்னா மாநாடு ஜேர்மனியை மீண்டும் ஒன்றுபடுத்தியது.
  C) ஜேர்மன் ஐக்கியத்திற்கு சொல்வரின் வரிச்சங்கம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியது.
  D) ஜேர்மன் ஐக்கியத்திற்கு ரஷ்யா பெரும் உதவிகளை புரிந்தது. ( )

29) பிரான்சியப் புரட்சி
  A) 14ம் லூயி மன்னன் காலத்தில் பிரான்சியபக் புரட்சி ஏற்பட்டது.
  B) பிரான்ஸ் அரசின் அடக்கு முறையின் சின்னமாக பஸ்ரீல் சிறைச்சாலை விளங்கியது.
  C) மிராபோ பிரான்ஸ் புரட்சிக்கு தலைமை வகித்தார்.
  D) ஸ்டேட் ஜெனரலை 15ம் லூயி கூட்டினான். ( )

30) வியன்னா மாநாடு.

A) நெப்போரியன் வியன்னா மாநாட்டிற்கு தலைமை வகித்தான்.
B) வியன்னா மாநாட்டின் முடிவில் மீண்டும் 16ம் லூயி முடிசூடப்பட்டான்.
C) பிரித்தானியா மோல்டா தீவை பெற்றுக் கொண்டது.
D) வெனிசியா, லொம்பாடி போன்ற இடங்கள் ஆஸ்திரியாவிற்கு கிடைத்தன. ( )

- **31 – 35 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

31) கிரேக்கத்திற்கு முன்னர் நிலவிய நாகரிகத்தை பெயரிடுக.

1. உரோம நாகரிகம் 2. மினெர்வன் நாகரிகம் 3. கிறிஸ்தவ நாகரிகம்
4. இஸ்லாமிய நாகரிகம் 5. அமெரிக்க நாகரிகம் ( )

32) பின்வருவோரில் மறுமலர்ச்சிக் காலத்தில் கலைஞர்களுக்கு உதவி புரியாத செல்வந்த குடும்பம் எது?

1. மெடிசி குடும்பம் 2. ஸ்ருவட் குடும்பம் 3. ஸ்போலா குடும்பம்
4. எஸ்டே குடும்பம் 5. கொன்ஸாகா குடும்பம் ( )

33) நெப்போலியனுடன் தொடர்புடைய போர் எது?

1. வோட்டலூர்போர் 2. பொகுமியப் போர் 3. ஸ்கண்டிநேவியப் போர்
4. அமெரிக்க சுதந்திரப்போர் 5. நூற்றாண்டுப் போர் ( )

34) பின்வருவனவற்றில் லியனாடோடாவின்சியின் படைப்பு எது?

1. சிஸ்ரைன் ஆலய ஓவியங்கள் 2. ஏதென்சின் பாடசாலை
3. இறுதித் தீர்ப்பு 4. மொனாலிசா
5. மோசஸின் உருவம் ( )

35) குருதிச் சுற்றோட்டத் தொகுதியை கண்டறிந்த அறிஞர் யார்?

1. பரசெல்ஸ் 2 நிக்கலஸ் கொப்பனிக்கஸ் 3. வில்லியம் ஹார்வே
4. மைக்கல் சர்வேட்ஸ் 5. ஐசாக் நியூட்டன் ( )

- **36 – 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிகளுக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருந்துவதை எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 1. | சரியானது | பிழையானது |
| 2. | சரியானது | சரியானது |
| 3. | பிழையானது | பிழையானது |
| 4. | பிழையானது | சரியானது |
| 5. | சரியானது | சரியானதும் முதல் கூற்றினை நன்றாக விளக்குவதாகும். |

agaram.lk

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 36) | கிரேக்க வழிபாட்டு முறைகள் சுதந்திர சிந்தனையை மறுதலிக்கவில்லை. | கிரேக்கர்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பற்றிய நல்லபிப்பிராயம் கொண்டிருந்தனர். ( ) |
| 37) | பேடினன் - இசபெலா கொலம்பஸின் நாடுகாண் பயணங்களிற்கு உதவிகள் புரிந்தனர். | பிறேசில் போர்த்துக்கல்லின் குடியேற்ற நாடாகும். ( ) |
| 38) | ஏழாண்டுப் போரே அமெரிக்காவில் பிரித்தானியா வலுவாக காலூன்ற உதவியது. | வேர்ஜுனியா பிரித்தானியரால் அமெரிக்காவில் அமைக்கப்பட்ட இறுதிக் குடியேற்றமாகும். ( ) |
| 39) | பிரான்சிய புரட்சியில் விவசாயிகள் கூடுதலாகி பங்களிப்பை வழங்கினர். | ஆமெரிக்க சுதந்திரப் போரில் கவுண்ட் கபூரின் பங்களிப்பு பிரதானமானதாகும். ( ) |
| 40) | முப்பதாண்டுப் போரில் புரட்டஸ்தாந்துகள் ஆரம்பத்தல் இருந்து முன்னிலை பெற்றிருந்தனர். | முப்பதாண்டுப் போரில் சுவீடன் புரட்டஸ்தாந்து சார்பாக போரிட்டது. ( ) |

agaram.lk

FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre
# தவணைப் பரீட்சை மார்ச் - 2019
# Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | ஐரோப்பிய வரலாறு | |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **அத்துடன் பகுதி B இலிருந்து ஒரு வினாவையேனும் பகுதி C இலிருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மூன்று வினாக்களுக்கு விடை தருக. (முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை நான்கு ஆகும்).**
- **முதலாம் வினாவுக்கு விடை அளிப்பதற்கு ஐரோப்பிய புறவுருவப்படம் வழங்கப்படும்.**

## பகுதி A

1) உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்ட பன்னிரெண்டு இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1. றோன் நதி | 2. பிரன்ஸ் மலை | 3. அசோக் கடல் | 4. டாடனல்ஸ் |
| 5. ஸ்பாட்டா | 6. கொன்ஸ்தாந்திநோபிள் | 7. பேர்ளின் | 8. வெனிஸ் |
| 9. ஆஸ்திரியா | 10. லீவர்பூல் | 11. டென்மார்க் | 12. ஆம்ஸ்ரடாம் |

## பகுதி B

agaram.lk

2) ஐரோப்பிய வரலாற்றில் உரோமர் காலம் ஆட்சிமுறைகள் தொடர்பில் மிகமுக்கியத்துவம் பெறுகின்ற காலகட்டமாகும்.
   1. உரோம மன்னர்கள் மூவரின் பெயர்களைத் தருக. (3 புள்ளிகள்)
   2. உரோமர் இராட்சியத்தின் அமைவிடத்தைத் தருக. (3 புள்ளிகள்)
   3. உரோமரின் குழுஆட்சி கொண்டிருந்த சிறப்புகளைக் குறிப்பிட்டு தெளிவுற விளக்குக. (10 புள்ளிகள்)

3) ஐரோப்பா நவீனமயப்படுத்தப்படுவதற்கு மறுமலர்ச்சியே வித்திட்டது.
   1. மறுமலர்ச்சி ஏற்பட்ட நாட்டினைப் பெயரிடுக. (1 புள்ளி)
   2. மறுமலர்ச்சி என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. (2 புள்ளிகள்)
   3. பின்வருவோர் பங்களிப்பு வழங்கிய துறைகளைக் குறிப்பிடுக.
      1. லியானாடோ டாவின்சி
      2. கலிலியோ கலிலி
      3. வில்லியம் ஹாவே (3 புள்ளிகள்)
   4. பின்வரும் துறைகளின் மறுமலர்ச்சி ஏற்படுத்திய தாக்கங்களை விளக்குக.
      1. மொழி
      2. இலக்கியம்
      3. கலைகள் (4 புள்ளிகள்)
   5. ஐரோப்பாவில் நாடுகாண் பயணத்துறை வெற்றிபெறுவதற்கு வழிவகுத்த நபர்களையும் அவர்களது சாதனைகளையும் விளைவுகளையும் விளக்குக. (6 புள்ளிகள்)

4) புதிய உலகமென அமெரிக்காவை ஐரோப்பியர் அழைத்தனர்.
   1. அமெரிக்கப் பெருநிலப் பரப்பிற்கு முதல் முதலில் சென்றவரைப் பெயரிடுக. (1 புள்ளி)
   2. பிரித்தானியரால் அமெரிக்காவில் அமைக்கப்பட்ட முதற்குடியேற்றத்தைப் பெயரிடுக. (1 புள்ளி)
   3. ஐரோப்பியர் அமெரிக்காவைச் சென்றடைந்த போது அங்கு வாழ்ந்த நான்கு பூர்வீக மக்கள் கூட்டத்தைப் பெயரிடுக. (4 புள்ளிகள்)

4. பிரித்தானியர் அமெரிக்காவிற்கு புலம்பெயர்ந்தமைக்கான காரணங்கள் நான்கு தருக. (4 புள்ளிகள்)
5. அமெரிக்கச் சுதந்திரப் போருக்கான காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

5) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டுக்கு வரலாற்று முக்கியத்துவம் தொடர்பாகக் குறிப்புக்களை எழுதுக.
1. மதசீர்திருத்த இயக்கம்.
2. முப்பதாண்டுப் போர்.
3. கிரேக்க நகராட்சி
4. கைத்தொழிற் புரட்சி (8 x 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

6) பிரான்சியப் புரட்சி குழந்தை என நெப்போலியன் பொனபாட் அழைக்கப்படுகின்றான்.
1. நெப்போலியன் எழுச்சியடைவதற்கு வழிவகுத்த காரணிகள் 3 எழுதுக. (3 புள்ளிகள்)
2. நெப்போலியன் பின்வரும் துறைகளில் மேற்கொண்ட மறுசீரமைப்புகளை விளக்குக.
   1. கல்வி 2. சமயம் 3. நீதி (6 புள்ளிகள்)
3. நெப்போலியனின் வெளிநாட்டுக் கொள்கைகளை விளக்குக. (7 புள்ளிகள்)

7) ஜேர்மனியை ஒன்றிணைக்கும் செயற்பாட்டின் மூன்று கட்டங்களையும் விளக்குக. (16 புள்ளிகள்)

8) இத்தாலி ஐக்கியம் பூண்ட வரலாற்றை தெளிவுற விளக்குக. (16 புள்ளிகள்)

9) பின்வரும் எவையேனும் இரண்டிற்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த குறிப்புக்கள் எழுதுக.
1. பிரான்சியப் புரட்சி
2. வியன்னா மாநாடு
3. ரஷ்யப் புரட்சி
4. மெட்றனிச் (8 x 2 = 16 புள்ளிகள்)

agaram.lk